# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | STC No.394/2024 | Date: 20.02.2026 |
| Deposition of Witness for | : | **பு.சா.1** | |
| Name | : | **தமிழ்செல்வன்** | |

(எதிரி ஆஜர்).

**குறுக்கு விசாரணை** :-

1) நான் லாரி சீட் கவர்ஸ் தயாரிக்கும் தொழில் செய்து வருகிறேன். நான் எதிரிக்கு எங்கு வைத்து கடன் கொடுத்தேன் என்றால் எலக்ட்ரீசியன் கடையில் வைத்து கொடுத்தேன். எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் தொகையை ரூ.500/- ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேன். நான் வருமானவரி செலுத்தவில்லை. நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.3,00,000/-ம் தொகையை வீட்டில் வைத்திருந்து கொடுத்தேனா அல்லது வங்கியில் எடுத்து கொடுத்தேனா என்றால் கடன் வாங்கி கொடுத்தேன்.

2) யாரிடம் கடன் வாங்கினேன் என்றால் எனது நண்பர் சிவக்குமார் என்பவரிடம் இருந்து கடன் வாங்கி கொடுத்தேன். நான் எதிரிக்கு கொடுத்த கடனை எனது நண்பர் சிவக்குமார் என்பவரிடம் இருந்து கடன் வாங்கி கொடுத்தேன் என்ற விவரத்தை நான் புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி 15-02-2018 ம் தேதி வழக்கு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தால் வசூலாகிவிடும் என்று உறுதிமொழி ஏதும் அளித்ததாக நான் எனது புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான், காசோலை கொடுத்ததால் நான் தாக்கல் செய்தேன்.

3) வசூலுக்கு தாக்கல் செய்த இரண்டு நாட்கள் கழித்து வங்கி குறிப்பாணை பெற்றுக்கொண்டேன். கடந்த 17-02-2018 ம் தேதியன்று காசோலை வசூலாகாமல் திருப்பப்பட்ட மெமோவை பெற்றுக்கொண்டு, 26-03-2018 ம் தேதியன்று நான் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். நான் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன், அதில் உள்ள சங்கதிகள் என்னுடையது தான். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டாரா என்றால் பெற்றுக்கொண்டார்.

4) எதிரி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்க்கு ஆதரவாக ஆவணத்தை புகாரில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்க்கு ஆதரவாக ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்க்கு ஆதரவாக ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கான காரணத்தை நான் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வழக்கு காசோலையில் சீல் மேல் கையொப்பம் செய்ததாக தெரிகிறது என்றால் சரியல்ல.

5) எதிரி என்னிடம் வழக்கு காசோலையை சட்டப்படியான கடன் தொகைக்காக கொடுக்கவில்லை என்றும், சீட்டு போட்டதற்காக பிணையமாக கொடுத்த காசோலை என்றால் சரியல்ல. விஜயலட்சுமி பேங்கர்ஸ் என்ற நிறுவனத்தில் நான் பங்குதாரர் என்றால் சரிதான். எதிரி விஜயலட்சுமி பேங்கர்ஸ் என்ற நிறுவனத்தில் சீட்டு போட்டிருந்தார் என்றும், அதற்கு பிணையமாக வழக்கு காசோலை கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. விஜயலட்சுமி பேங்கர்ஸ் என்ற

நிறுவனத்தில் நான் ஒரு பங்குதாரர் என்பதால் எதிரியின் காசோலையை மோசடியாக எடுத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு எந்தவிதமான சட்டப்படியான கடனை கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றாலும், அதற்காக இந்த காசோலை கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

6) எதிரியிடம் இருந்து பணம் பறிக்கும் நோக்கத்தில் விஜயலட்சுமி பேங்கர்ஸ் என்ற நிறுவனத்திடம் இருந்த எதிரி கொடுத்த பிணைய காசோலையை எடுத்து இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பொய் வழக்கு என்பதால் தான் வழக்கறிஞர் அறிவிப்பை எதிரிக்கு சார்வு செய்யாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு சட்டப்படியாக சார்வு செய்யாததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,

Sd/-Tamilselvan

Judicial Magistrate No.1,
Sankari.